2. விதி 110–ன்கீழ் அறிக்கை

விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் மருத்துவச் சிகிச்சைக்காகத் தமிழகத்திற்கு வர மத்திய அரசுக்குப் பரிந்துரைத்துள்ளதாக மாண்புமிகு துணை முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு 110-ஆவது விதியின்கீழ் ஓர் அறிக்கையினைப் படிக்க விரும்புகிறேன்:*

மலேசியாவிலிருந்து சென்னைக்கு சிகிச்சைக்காக வந்த, விடுதலைப் புலிகள் இயக்கத்தினுடைய தலைவர் பிரபாகரனின் தாயார் திருமதி திருவேங்கடம் வேலுப்பிள்ளை பார்வதி அம்மாள் அவர்களைச் சென்னை விமான நிலையத்தில் குடியுரிமை அதிகாரிகள் திருப்பியனுப்பிய நிகழ்வு குறித்து, சட்டப் பேரவையில் கடந்த 19-4-2010 ஆம் நாளன்று விவாதிக்கப்பட்டது. அதற்குப் பதில் கூறிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், "இந்தச் செய்தி முறையாக உரிய வகையில் தமக்குச் சொல்லப்படவில்லை என்றும், அரசில் யாருக்கும் சொல்லப்படவில்லையென்றும், அதன் காரணமாக அவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டார்கள். அப்படித் திருப்பி அனுப்பப்பட்டவர்கள் மலேசியாவிற்கே—அதாவது கோலாலம்பூருக்கே—திரும்பிச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் அங்கே வைத்திய வசதி பெறுவதாக பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. மீண்டும் தமிழகத்திற்குத் தான் சென்று வைத்திய வசதி செய்துகொள்ள விரும்புகிறேன் என்று அவர்கள் அறிவிப்பார்களேயானால், அதைப் பரிசீலனை செய்து, மத்திய அரசுக்கு அதைப்பற்றி எழுத மாநில அரசு தயாராக இருக்கிறது" என்று அன்றைக்கு அவையிலே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நீதிப் பேராணை விண்ணப்பம் விசாரணைக்கு

எடுத்துக்கொள்ளப்பட்டபோது, 30-4-2010 ஆம் நாளன்று தமிழக அரசினுடைய வழக்குரைஞர், “மாநில அரசுக்கு மருத்துவச் சிகிச்சை கோரி மனு ஏதும் அளித்தால் மனிதாபிமான அடிப்படையிலே பரிசீலிக்கப்பட்டு, மத்திய அரசுக்குத் தக்க முன்மொழிவுகள் அனுப்பப்படும்” என்ற கருத்தை நீதிமன்றத்தின்முன் வைத்தார்.

இரு தரப்பினரின் வாதுரைகளையும் கேட்டறிந்த உயர் நீதிமன்ற நீதிபதிகள், திருமதி பார்வதி அம்மாள் அவர்களின் மருத்துவச் சிகிச்சை குறித்த முறையீட்டை மனுதாரரோ அல்லது பார்வதி அம்மாள் தரப்பிலோ கொடுக்க வேண்டுமெனவும், அப்படிக் கொடுக்கப்பட்ட மனுவினைத் தமிழ்நாடு அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளார்கள்.

இதற்கிடையில் திருவேங்கடம் வேலுப்பிள்ளை பார்வதி அம்மாள் அவர்களுடைய பெருவிரல் ரேகை பதித்த கடிதம் ஒன்று, தனது வைத்தியத்திற்காக, கோலாலம்பூரிலிருந்து திருச்சிக்கு விமானத்தில் வருவதற்கு மலேசியாவில் உள்ள இந்தியத் தூதரகம் மூலமாக ஏற்பாடு செய்து தரும்படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை வேண்டி, 30-4-2010 அன்று முதலமைச்சரின் தனிப் பிரிவில் இயங்கும் கணிப் பொறியில் மின்னஞ்சல் மூலமாக அது பெறப்பட்டது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சட்டப் பேரவையில் அறிவித்ததற்கிணங்க, திருமதி பார்வதி அம்மாள் அவர்கள் அனுப்பியுள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி, மருத்துவச் சிகிச்சைக்காக தமிழ்நாட்டிற்கு வந்து செல்வதற்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, ஆராய்ந்து அனுமதி அளிக்கலாம் என்ற பரிந்துரைக் கடிதம் மத்திய உள் துறைச் செயலாளருக்குத் தமிழக அரசால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)